## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COUR-T OF JUDICIAL MAGISTRATE, TITTAGUDI.

**CC.No.7-2015** **L.W.8** **P.W.7**

| Name | டாக்டர்.ராஜ்குமார் | Caste | |
|---|---|---|---|
| Father/Husband Name | **தியாகராஜ்** | Calling | |
| Village | **விருத்தாசலம்** | Religion | |
| Taluk | **விருத்தாசலம்** | Age | 50 |
| District | **கடலூர்** | Time | 12.13 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, விதி முறைகளின் படி 21.09.2023 நாளாகிய இன்று திரு.அன்பு பி.எ., பி.எல்., நீதித்துறை நடுவர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டது. சாட்சி உண்மையாக சொல்கிறேன் என சத்திய பிரமாணம் செய்கிறார்.

**எதிரிகள் இருவரும் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் தற்போது விருத்தாசலம் அரசு மருத்துவமணையில் குடிமை மருத்துவராக பணிபுரிந்து வருகின்றேன். கடந்த 01.06.2014 தேதியன்று காலை 10.15 மணிக்கு நான் அதே மருத்துவமணையில் உதவி மருத்துவராக பணியில் இருந்த போது ராஜேந்திரன், வயது 45 த.பெ.மகாராஜன் என்பவர் தானாக சிகிச்சைக்கு வந்தாரை நான் பரிசோதித்த போது சுய நினைவுடன் இருந்தார். அவரை நான் விசாரித்த போது அவர் என்னிடம் 01.06.2014 தேதியன்று காலை 6.00 மணிக்கு தன் வீட்டுக்கு பின் தெரிந்த ஏழு நபர்கள் கத்தி, வாங்கு, மூங்கில் கழியால் தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதித்த போது கீழ்க்கண்ட காயங்கள்

1. 1 X 0.5 X0.5 செ.மீ சிதைந்த காயம் வலது காலில் காணப்பட்டது.
2. வலது காலில் 3 X3 செ.மீ ரத்தக்கட்டு காணப்பட்டது.
3. வலது புற தலையில் 1 X 0.5 செ.மீ சீராப்பு காயம் காணப்பட்டது.

அவருக்கு நான் சிகிச்சை அளித்து உள்நோயாளியாக அனுமதித்தேன். பின்னர் அவர்கள் கேட்டு கொண்டதன் பேரில் மேல்சிகிச்சைக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் கடலூர் அரசு மருத்துவமணையில் இருந்து பெறப்பட்ட அவருக்கு இடது முன்னாங்கையில் எலும்பு முறிவு ஏற்பட்டதாக கொடுத்த காயச்சான்றுகளில் அடிப்படையில் இது கொடுங்காயம் என சான்று அளித்தேன். மேற்சொன்ன என்னால் பரிசோதித்த மூன்று காயங்களும் சொற்ப காயம் என சான்று அளித்தேன். நான் பரிசோதித்த போது ராஜேந்திரனுக்கு எலும்பு முறிவு இருந்தா என்று எனக்கு தற்போது நினைவு இல்லை. தற்போது சமூக நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் காயச்சான்று நான் வழங்கியது தான். அது **அசாஆ 3** ஆகும்.

2. மேலும் அன்றைய தினமே காலை 10.25 மணிக்கு நான் அதே மருத்துவமணையில் உதவி மருத்துவராக பணியில் இருந்த போது ஜெயலட்சுமி, வயது 45 க.பெ.ராஜேந்திரன் என்பவரைஅவரது கணவர் சிகிச்சைக்கு அழைத்து வந்தவரை நான் பரிசோதித்த போது சுய நினைவுடன் இருந்தார். அவரை நான் விசாரித்த போது அவர் என்னிடம் 01.06.2014 தேதியன்று காலை 6.00 மணிக்கு தன் வீட்டுக்கு பின் தெரிந்த ஏழு நபர்கள் கத்தி, வாங்கு, மூங்கில் கழியால் தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதித்த போது கீழ்க்கண்ட காயங்கள்

1. 3 X 1 X1 செ.மீ முன் தலையில் சிதைந்த காயம் காணப்பட்டது.
2. வலது கை மணிக்கட்டில் எலும்பு முறிவு காணப்பட்டது.
3. வலது கை மணிக்கட்டில் 1 X 0.5 X0.5 செ.மீ சிதைந்த காயம் காணப்பட்டது.
4. இடது கை மோதிர விரலில் 1X 1 செ.மீ சீராப்பு காயம் காணப்பட்டது.

அவருக்கு நான் சிகிச்சை அளித்து உள்நோயாளியாக அனுமதித்தேன். பின்னர் அவர்கள் கேட்டு கொண்டதன் பேரில் மேல்சிகிச்சைக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் கடலூர் அரசு மருத்துவமணையில் இருந்து பெறப்பட்ட ஆவணங்களில் அடிப்படையில் அவருக்கு ஏற்பட்ட இரண்டாவது காயம் எலும்பு முறிவு கொடுங்காயம் காயம் எனவும் மற்ற காயங்கள் 1, 3, 4 சொற்ப காயம் என்று சான்று அளித்தேன். தற்போது சமூக நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் காயச்சான்று நான் வழங்கியது தான். அது **அசாஆ 4** ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

3. மேலும் அன்றைய தினமே காலை 10.10 மணிக்கு நான் அதே மருத்துவமணையில் உதவி மருத்துவராக பணியில் இருந்த போது ராஜபிரியா, வயது 17 த.பெ.ராஜேந்திரன் என்பவரைஅவரது தந்தை சிகிச்சைக்கு அழைத்து வந்தவரை நான் பரிசோதித்த போது சுய நினைவுடன் இருந்தார். அவரை நான் விசாரித்த போது அவர் என்னிடம் 01.06.2014 தேதியன்று காலை 6.00 மணிக்கு தன் வீட்டுக்கு பின் தெரிந்த ஏழு நபர்கள் கத்தி, வாங்கு, மூங்கில் கழியால் தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதித்த போது கீழ்க்கண்ட காயங்கள்

1. 0.5 X 0.5 X0.5 செ.மீ வலது பக்க கீழ் உதட்டில் சிதைந்த காயம் காணப்பட்டது.
2. 0.5 X 0.5 X0.5 செ.மீ இடது கை சிறிய விரலில் சிதைந்த காயம் காணப்பட்டது.
3. 1 X 1 செ.மீ இடது பக்க தலையில் சீராப்பு காயம் காணப்பட்டது.

அவருக்கு நான் சிகிச்சை அளித்து உள்நோயாளியாக அனுமதித்தேன். பின்னர் அவர்கள் கேட்டு கொண்டதன் பேரில் மேல்சிகிச்சைக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் கடலூர் அரசு மருத்துவமணையில் இருந்து பெறப்பட்ட ஆவணங்களில் அடிப்படையில் அவருக்கு ஏற்பட்ட அனைத்து சொற்ப காயம் என்று சான்று அளித்தேன். தற்போது சமூக நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் காயச்சான்று நான் வழங்கியது தான். அது **அசாஆ 5** ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

4. மேலும் அன்றைய தினமே காலை 10.00 மணிக்கு நான் அதே மருத்துவமணையில் உதவி மருத்துவராக பணியில் இருந்த போது ஷீலா, வயது 15 த.பெ.ராஜேந்திரன் என்பவரைஅவரது தந்தை சிகிச்சைக்கு அழைத்து வந்தவரை நான் பரிசோதித்த போது சுய நினைவுடன் இருந்தார். அவரை நான் விசாரித்த போது அவர் என்னிடம் 01.06.2014 தேதியன்று காலை 6.00 மணிக்கு தன் வீட்டுக்கு பின் தெரிந்த ஏழு நபர்கள் கத்தி, வாங்கு, மூங்கில் கழியால் தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதித்த போது கீழ்க்கண்ட காயங்கள்

1. 3 X 1 X0.5 செ.மீ இடது மோதிர விரலில் சிதைந்த காயம் காணப்பட்டது.

2. வலது புற கை மணிக்கட்டில் எலும்பு முறிவு ஏற்பட்டு இருக்கலாம் என்று என்னுடைய பரிசோதனையில் குறிப்பிட்டுள்ளேன்.

3. 0.5 X 0.5 செ.மீ வலது கை மணிக்கட்டில் சீராப்பு காயம் காணப்பட்டது.

அவருக்கு நான் சிகிச்சை அளித்து உள்நோயாளியாக அனுமதித்தேன். பின்னர் அவர்கள் கேட்டு கொண்டதன் பேரில் மேல்சிகிச்சைக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் கடலூர் அரசு மருத்துவமணையில் இருந்து பெறப்பட்ட ஆவணங்களில் அடிப்படையில் அவருக்கு ஏற்பட்ட முதலாவது காயம் கொடுங்காயம் என்றும் காயம் 2,3 சொற்ப தன்மை வாய்ந்தது என்று சான்று வழங்கினேன். தற்போது சமூக நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் காயச்சான்று நான் வழங்கியது தான். அது **அசாஆ 6** ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

ராஜேந்திரனுக்கு ஏற்பட்ட முதல் காயம் வலுவலுப்பான பகுதியில் தானே விழுந்தால் ஏற்பட வாய்ப்பு உள்ளதா? என்றால் உள்ளது, மற்ற காயங்களும் அவ்வாறு தவறி விழுந்தால் ஏற்பட வாய்ப்பு உள்ளதா? என்றால் உள்ளது. வலது தலையில் ஏற்பட்ட காயமும் சொரசொரப்பான பகுதியில் விழுந்தால் ஏற்பட வாய்ப்பு உள்ளதா? என்றால் உள்ளது. ராஜேந்திரனுக்கு ஏற்பட்ட எலும்பு முறிவு ஆவணத்தின் அடிப்படையில் தான் சொல்கிறேன் என்றால் சரிதான். இந்த எலும்பு முறிவு செரசெரப்பான பகுதியில் விழுந்தால் ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்றால் உள்ளது. ஜேயலட்சுமிக்கு ஏற்பட்டட முதல் காயம் முன்தலையில் ரத்தக்கட்டு செரசெரப்பான பகுதியில் விழுந்தால் ஏற்பட வாய்ப்பு உள்ளதா? என்றால் உள்ளது. ஜெயலெட்சுமிக்கு வலது மணிக்கட்டில் ஏற்பட்ட காயம் செரசெரப்பான பகுதியில் விழுந்தால் ஏற்பட்ட வாய்ப்பு உள்ளதா? என்றால் உள்ளது. மோதிர விரலில் ஏற்பட்ட காயமும் கீழே விழுந்தால் ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்றால் உள்ளது. நான் அளித்த சிகிச்சையின் அடிப்படையில் மற்றும் ஆவணத்தின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கின்றேன். ஜெயலெட்சுமிக்கு நான் பரிசோதித்த போது எலும்பு முறீவு காணப்பட்டது.

சாட்சி ராஜபிரியாவுக்கு வலது பக்க கீழ் உதட்டில் ஏற்பட்ட காயம் செரசெரப்பான பகுதியில் விழுந்தால் ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்றால் உள்ளது. நான் சொன்ன மேற்சொன்ன அனைத்து காயங்கள் சாட்சிகள் செரசெரப்பான மற்றும் கூர்மான பகுதியில் விழுந்தால் ஏற்பட்ட வாய்ப்பு உள்ளதா என்றால் உள்ளது.

சாட்சி ஷீலாவுக்கு அனைத்து காயங்கள் சாட்சிகள் செரசெரப்பான மற்றும் கூர்மான பகுதியில் விழுந்தால் ஏற்பட்ட வாய்ப்பு உள்ளதா என்றால் உள்ளது. நான் ஆவணங்கள் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன். போலீசார் இது சம்மந்தமாக விசாரித்த தேதி நினைவு இல்லை.

**TYPED TO MYDICTATION OPENCOURT INPRESENCE OF ACCUSED READOVER TO THE DEPONENT AND ADMITTED BY HIM/HER TO BE CORRECT**

**JUDICIAL MAGISTRATE,**

TITTAGUDI